25.04.2024

O.S.No.284/2017

வா.சா.1.திரு.சிவக்குமாரன் த.பெ.சிவசுப்பிரமணியன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. கொட்டக்குடியை சேர்ந்த பழனியப்ப செட்டியாருக்கு பதினெட்டாம்படியான், அழகப்ப செட்டியார் என இரண்டு ஆண் வாரிசுகள் உண்டு என்றால் சரிதான். பதினெட்டாம்படியானுக்கு, பழனியப்ப செட்டியார், வள்ளியம்மை ஆச்சி, மாணிக்கம் என்ற பதினெட்டான் செட்டியார் ஆகிய 3 வாரிசுதார்கள் உண்டு என்றால் எனக்குதெரியாது. பழனியப்ப செட்டியாரின் இரண்டாவது மகன் அழகப்ப செட்டியாருக்கு குழந்தைகள் கிடையாது என்றால் எனக்குதெரியாது. மீனாட்சி ஆச்சியின் தாயார் பெயர் வள்ளியம்மை ஆச்சி ஆகும். வள்ளியம்மை ஆச்சியின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் எனக்கு தெரியாது. மீனாட்சி ஆச்சியை மாணிக்கம் செட்டியாருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். மாணிக்கம் செட்டியார் யாருடைய மகன் என்றால் சரியாக தெரியவில்லை. மாணிக்கம் செட்டியாருக்கும், மீனாட்சி ஆச்சிக்கும் குழந்தைகள் கிடையாது. மேற்படி மீனாட்சி ஆச்சியின் கணவர் மாணிக்கம் செட்டியாரின் உடன்பிறந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. வள்ளாலபட்டியில் உள்ள அழகன் செட்டியாருக்கு 3 மனைவிகள். முதல் மனைவி வள்ளியம்மை ஆச்சி, இரண்டாவது மனைவி தெய்வாணை ஆச்சி, 3 வது மனைவி ராஜேஸ்வரி ஆச்சி ஆவார்கள்.

2. வள்ளியம்மை ஆச்சிக்கும், அழகன் செட்டியாருக்கும் பிறந்த மகள்தான் மீனாட்சி ஆச்சி என்றால் சரிதான். வள்ளியம்மை ஆச்சி, அழகன்செட்டியார் இறந்த பின்புதான் இறந்தார் என்றால் சரிதான். அழகன் செட்டியாருக்கும், தெய்வாணை ஆச்சிக்கும் கனகாம்பிகை ஆச்சி, உமாதேவி ஆச்சி என இரண்டு பெண் மக்கள் என்றால் சரிதான். மேற்படி தெய்வாணை ஆச்சி, அழகன்செட்டியார் இறப்பதற்கு முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். அழகன் செட்டியாருக்கும், ராஜேஸ்வரி ஆச்சிக்கும், யோகாம்பிகை என்ற ஒரே பெண் மகள் உண்டு என்றால் சரிதான். ராஜேஸ்வரி 2016ம் ஆண்டுஇறந்து விட்டார் என்றால் சரிதான். அழகன் செட்டியாருக்கும், வள்ளியம்மை ஆச்சிக்கும் பிறந்த மீனாட்சி ஆச்சியை மேற்படி வள்ளியம்மை ஆச்சியின் உடன்பிறந்த சகோதரரான மாணிக்கம் என்ற பதினெட்டான் செட்டியார் என்பவருக்கு திருமணம் செய்துகொடுக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அவர் பெயர் மாணிக்கம் செட்டியார்தான். மேற்படி மாணிக்கம் செட்டியாருக்கும், மீனாட்சி ஆச்சிக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அழகன் செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அழகன் செட்டியார் 1951ல் இறந்துபோனார் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)